**நொச்சியாகம் பிரதேச சபை - 2023**

------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

நொச்சியாகம பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்து / உரிமை மாற்றங்களிலான கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் பொருன்மையான கணக்கீட்டுக் கொள்கைகளிற்குரிய தகவல்கள் உள்ளடங்களாக நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயமொன்றை வெளியிடவில்லை. அபிப்பிராயத்தை பறுக்கும் அடிப்படை பகுதியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான முக்கியத்துவம் காரணமாக இந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிரயத்திற்காக அடிப்படையொன்றை வழங்க போதிய மற்றும் பொறுத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக் கொள்ள என்னால் முடியவில்லை.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவம் மற்றும் தொடர்புடைய கட்டுப்படுத்தும் தர்ப்பினரின் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களிற்காக இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாக முன்வைத்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடும் செயற்பாடுகள் தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு, தொடர்புடைய தரப்பினரால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) உப பிரிவின் பிரகாரம், பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்ல வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் மேற்கொள்ளப்படும் கணக்காய்வின் அடிப்படையில் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளரின் அறிக்கையை வெளியிடுதல் எனது பொறுப்பாகும். ஏவ்வாறாயினும், மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் காரணமாக இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயமொன்றிற்காக

அடிப்படையொன்றை பெற்றுக் கொள்ள போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக் கொள்ள என்னால் முடியவில்லை.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் விடயங்கள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் பிரகாரம், முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆண்டின் ஒக்டோபர், நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களிற்காக கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 2,345,014 ஆன போதும் அது ரூபா 1,466,473 ஆகவும் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்வதென. | சரியாக பெறுமதிகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2023 சனவரி 01 திகதி கிடைக்க வேண்டிய முத்திரை கட்டண வருமானம் ரூபா 2,966,100 ஆன போதும் விரிவான வருமானக் கூற்றில் அது ரூபா 3,123,849 ஆக கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகதி கிடைக்க வேண்டிய முத்திரை கட்டணம் ரூபா 1,476,600 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | நிகவரடிய காணி பதிவாளர் அலுவலகத்திலிருந்து மீளாய்வாண்டில் கிடைத்திருந்ததாக உறுதி செய்யப்பட்ட ரூபா 254,000 ஆன முத்திரை கட்டணம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று பாதைகள், பாலம் மற்றும் மதகுகள் பெறுமானத் தேய்வு ரூபா 2,385,585 ஆக வேண்டிய போதும் அது பெறுமானத் தேய்வு கணக்கு மற்றும் பெறுமானத் தேய்வு ஒதுக்கக் கணக்கில் | ஏற்றுக் கொள்வதென. | சரியாக பெறுமதிகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முறையே ரூபா 4,348,966 மற்றும் ரூபா 1,965,381 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (உ) | 2023 திசெம்பர் 31 திகதி 04 வைப்பு வகைகளின் மீதி ரூபா 4,016,574 ஆன போதும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் அது ரூபா 5,046,123 ஆக ஆக கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) | 2023 திசெம்பர் 31 திகதி பெற வேண்டிய கடையறை வைப்பு ரூபா 135,000 ஆன போதும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் அது ரூபா 105,000 ஆக குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

**1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் பணம் மற்றும் பணத்திற்கு சமமானவைகளின் கீழ் 2022 திசெம்பர் 31 திகதி 05 வங்கி கணக்குளிற்குரிய மீதிகள் ரூபா 13,997,242 ஆன போது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றின் குறிப்பு II பிரகாரம் அது ரூபா 15,699,701 ஆனதில் ரூபா 1,702,459 ஆன வித்தியாசமானது. | ஏற்றுக் கொள்வதென. | அட்டவணைகள் நேரொத்த அறிக்கைகளுடன் இணக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 03 சொத்து உருப்படிகளிற்குரியதாக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் குறிப்பிட்டுள்ள பெறுமதி மற்றும் அதற்குரிய அட்டவணைகளில் குறிப்பிட்டுள்ள பெறுமதி ரூபா 138,762 இனால் வித்தியாசமாக இருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டு காசுப் பாய்ச்சல் கூற்றின் 02 உருப்படிகளின் மீதி மற்றும் அதற்குரிய அட்டவணை பிரகார மீதிகளிற்கிடையே ரூபா 233,064 ஆன வித்தியாசமானது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | மீளாய்வாண்டில் 04 இயந்திரங்களை வாடகைக்கு வழங்கியதற்கான வருமானம் விரிவான வருமானக் கூற்றின் பிரகாரம் ரூபா 1,509,695 ஆன போதும் வாடகைக்கு வழங்கும் பதிவேட்டின் பிரகாரம் அது ரூபா 1,158,475 ஆனதில் ரூபா 351,220 வித்தியாசமானது. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.3 கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| | விடயம் | தொகை | இணங்காத கணக்காய்வு சான்றுகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ---------- | ------------ | ---------------------------- | -------------- | ------------- |
| | | ரூபா | | | |
| (i) | பெற வேண்டிய வியாபார அனுமதிப்பத்திர கட்டணம் | 147,740 | (i) விரிவான அட்டவணை<br>(ii) காலப் பகுப்பாய்வு | கருத்து தெரிவிக்கப்படவில்லையென | உறுதிப்படுத்தல்களை சமர்ப்பிக்க வேண்டும் |
| (ii) | பெறவேண்டிய கழிப்புப் பொருள் வரி | 24,000 | (i) விரிவான அட்டவணை<br>(ii) காலப் பகுப்பாய்வு | மேற்படி | மேற்படி |
| (iii) | நிலுவை டென்டர் வரி வருமானம் | 9,539,674 | (i) விரிவான அட்டவணை<br>(ii) காலப் பகுப்பாய்வு | மேற்படி | மேற்படி |
| (iv) | நூலக புத்தகங்கள் | 3,100,764 | (i) விரிவான அட்டவணை<br>(ii) கணிப்பீட்டறிக்கை | மேற்படி | மேற்படி |
| (v) | 2020 சனவரி 01 திகதியின் பின் நிர்மாணித்த கட்டிடங்கள் | 20,029,485 | (i) கட்டிட அட்டவணை<br>(ii) நிர்மாண கருத்திட்டம்<br>(iii) கொள்வனவு செய்த ஆண்டு | மேற்படி | மேற்படி |
| (vi) | காணிகள் | 243,237,730 | (i) காணி அட்டவணைகள் | மேற்படி | மேற்படி |
| (vii) | பாதை,மதகு மற்றும் பாலம் | 23,156,236 | (i) பாதை, மதகு மற்றும் பாலங்கள் அட்டவணை<br>(ii) நிர்மாண கருத்த்திட்டம் மற்றும் ஆண்டு | மேற்படி | மேற்படி |
| (viii) | 2020 சனவரி 01 திகதியின் பின் கொள்வனவு செய்த தளபாடங்கள் | 2,999,353 | (i) தளவாட அட்டவணை<br>(ii) கொள்வனவு செய்த கருத்திட்டம்<br>(iii) கொள்வனவு செய்த ஆண்டு | மேற்படி | மேற்படி |
| (ix) | 2020 சனவரி 01 திகதியின் பின் கொள்வனவு | 4,930,953 | (i) கனணி அட்டவணை<br>(ii) கொள்வனவு செய்த கருத்திட்டம் | கருத்து தெரிவிக்கப்படவில்லையென | உறுதிப்படுத்தல்களை சமர்ப்பிக்க வேண்டும் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | செய்த கனணிகள் | | (iii) | கொள்வனவு செய்த ஆண்டு | | |
| (x) | அலுவலக உபகரணங்கள் | 1,739,541 | (i)<br>(ii)<br>(iii) | அலுவலக உபகரண அட்டவணை<br>கொள்வனவு செய்த கருத்திட்டம்<br>கொள்வனவு செய்த ஆண்டு | மேற்படி | மேற்படி |
| (xi) | பொருத்துக்கள் | 8,864,204 | (i)<br>(ii)<br>(iii) | பொருத்து அட்டவணை<br>பொருத்திய கருத்திட்டம்<br>பொருத்திய ஆண்டு | மேற்படி | மேற்படி |
| (xii) | பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 33,922,281 | (i)<br>(ii)<br>(iii) | பொறிகள் மற்றும் உபகரண அட்டவணை<br>பொருத்திய கருத்திட்டம்<br>கொள்வனவு செய்த ஆண்டு | மேற்படி | மேற்படி |
| (xiii) | உரிமை மாற்றல் கூற்றில் குறிப்பிட்ட சீராக்கம் | 600,208 | (i) | மீதி உறுதிப்படுத்தல்கள் | மேற்படி | மேற்படி |
| (xiv) | நீர் பட்டியல் வருமானம் | 12,017,734 | (i) | அட்டவணைகள் | மேற்படி | மேற்படி |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள்.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணக்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் தொடர்பு | இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 (1) (இ) பிரிவு | நிதி திட்டமிடல், உள்ளக கட்டுப்பாடு, ஏடுகள் மற்றும் கணக்குளை பேணிச் செல்லல், நிதி முகாமைத்துவம் மற்றும் முகாமைத்துவ தகவல்களை வழங்கும் செயன்முறை ஆக்கபூர்வமாக இடம்பெறுவதாக சபையின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக செயற்படும் | கருத்து தெரிவிக்கவில்லைெயன. | சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதிகாரம் மற்றும் பணிகளை மேற்கொள்ளும் அலுவலரான சபையின் செயலாளரினால் உரியவாறு மேற்கொண்டிருக்கவில்லை. | | |
| (ஆ) 1988 ஆகஸ்ட் 23 இன் 520/7 இலக்க பொது அங்கீகார துணை சட்டம் | | | |
| (i) 20 ஆம் துணைச் சட்டம் | பிரதேச சபையினால் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்ளாது 02 தனியார் நிறுவனங்கள் நொச்சியாகம நகரில் கோழிக் இறைச்சி வியாபாரத்தை செய்து கொண்டிருந்ததுடன் அந்த இடம் தொடர்பாக ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகளை மேற்கொள்ள சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மேற்படி | பொது அங்கீகார துணை சட்டம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) 32 ஆம் துணைச் சட்டத்தின் 9 உப பிரிவு | பொது சுகாதார பரிசோதகரினால் பரீட்சிக்கும் ஒவ்வொறு கிலோ இறைச்சிக்கும் ரூபா 10 இற்கு மேற்படாத கட்டணத்தை அறவிட வேண்டிய போதும் பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் அறுக்கப்படும் கால்நடைகள் தொடர்பான அறிக்கையை பெற்றுக் கொள்ள அல்லது அந்த கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மேற்படி | மேற்படி |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் 2023 திசெம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 3,624,575 ஆனதுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய செலவு ரூபா 7,357,404 ஆனது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் பிரகாரம் மீளாய்வாண்டிற்கு மற்றும் கடந்த ஆண்டிற்குரியதாக மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான வகை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில்லிட்ட வருமானம் | சேகரித்த வருமானம் | திசெம்பர் 31 திகதி மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில்லிட்ட வருமானம் | சேகரித்த வருமானம் | திசெம்பர் 31 திகதி மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரி மற்றும் வரி | 3,755,463 | 3,904,611 | 5,549,350 | 3,750,810 | 3,244,500 | 3,484,481 | 2,741,860 | 5,395,549 |
| (ii) | வாடகை | 10,900,200 | 13.526,580 | 12,018,953 | 17,519,451 | 10,244,137 | 7,893,050 | 7,043,467 | 16,011,824 |
| (iii) | அனுமதிப்பத்திர கட்டணம் | 1,708,240 | 1,150,370 | 1,150,370 | 147,740 | 1,750,000 | 1,568,066 | 1,568,066 | 147,740 |
| (iv) | ஏனைய வருமானம் | 24,823,443 | 28,816,158 | 13,266,556 | 28,045,447 | 24,239,020 | 21,258,363 | 23,399,215 | 12,495,845 |
| | | 41,187,346 | 33,871,139 | 31,985,229 | 49,463,448 | 39,477,657 | 34,203,960 | 34,752,608 | 34,050,958 |

### 2.2.2. வருமான சேகரிப்பின் செயலாற்றுகை

சபையின் வருமானம் சேகரிக்கும் செயலாற்றுகை தொடர்பான அவதானிப்பு பின்வருமாறு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரி மற்றும் வரி** | | |
| (i) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி நிலுவை வீதவரி மற்றும் வரி ரூபா 3,750,810 ஆனதுடன் மீளாய்வாண்டு பில்லிடல் ரூபா 3,904,611 ஆனதில் பில்லிடலின் 96 சதவீதம் அறவிடப்பட்டு இருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் வீதவரி அறவிடல் 2005 ஆணடில் மேற்கொள்ளப்பட்ட ஆதன மதிப்பீட்டின் பிரகாரம் இடம்பெறுவதுடன் 2005-2023 காலத்தினுள் இடம்பெற்றுள்ள நிர்மாண உரிமை மாற்றல் பிரகாரம் மற்றும் மாற்றுதலின் பிரகாரம் கட்டண அறவீடு திருத்தப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | ஆதனங்களை மதிப்பிட்டு கட்டணம் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) அரச நிறுவனமொன்றிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 932,443 ஆன நிலுவை வீதவரியை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மேற்படி | அறவிடலை துரிதப்படுத்த வேண்டும். |
| (iv) வீதவரி நிலுவையினுள் 3 ஆண்டு முதல் 20 ஆண்டு இடையிலான காலமாக நிலவும் நிலுவை மீதிகளை அறவிட 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158(அ) பந்தியில் குறிப்பிடப்படும் அதிகாரம் | மேற்படி | அறவிடப்படாதுள்ள வீதவரி நிலுவையை அறவிட சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| பிரகாரம் ஆதனங்களை சுவீகரித்தல் போன்ற சட்ட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| **(ஆ) வாடகை** | | |
| சொத்துக்களை குத்தகை வழங்கியதற்காக 2023 திசெம்பர் 31 திகதி அறவிட வேண்டிய ரூபா 1,514,865 ஆன நிலுவை வாடகையை அறவிட்டிருக்கவில்லை. | மேற்படி | நிலுவை தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(இ) அனுமதிப்பத்திர கட்டணம்** | | |
| (i) அதிகார பிரதேசத்தில் காணப்படும் சுற்றுலா சபையில் பதிவு செய்துள்ள 02 ஹோடல்களில் இருந்து அறவிட வேண்டிய 01 சதவீத அனுமதிப்பத்திர கட்டணம் ரூபா 91,626 தொகை மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியளவிலும் அறவிட்டிருக்கவில்லை. | மேற்படி | அறவிடலை துரிதப்படுத்தல் வேண்டும். |
| (ii) அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள கைத்தொழில், வியாபார அனுமதிப்பத்திரம் பெற வேண்டிய நிறுவனங்கள் மற்றும் அறவித்தல் பலகை தொடர்பாக வீதிகள் ரீதியாக, பாதைகள் ரீதியாக முறையான கணிப்பீடெர்னறை மேற்கொண்டு விபரங்களை ஆபணப்படுத்தி சரியான கட்டண அளவை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மேற்படி | குறித்த கணிப்பீட்டை மேற்கொண்டு கட்டணம் அறவிட செயற்பட வேண்டும். |
| **(ஈ) ஏனைய வருமானம்** | | |
| (i) சபைக்கு சொந்தமான நொச்சியாகம், குகுள்கடுவ, ஹொருவிட, இஹலவெடியாய நீர் கருத்திட்டங்களிலிருந்து மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி பெறவேண்டிய நிலுவை நீர் கட்டணம் ரூபா 6,823,873 தொகையை அறவிட்டிருக்கவில்லை. | மேற்படி | அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) நீர் கருத்திட்டங்களிலிருந்து கிடைக்கும் வருமானம், செலவினத்திற்கு போதாததுடன் நீர் கட்டணத்தை திருத்தி குறைந்தபட்சம் நடாத்திச் செல்லும் கிரயம் மற்றும் பராமரிப்பு செலவை காப்புச் செய்யும் வகையில் கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நீர் கருத்திட்டங்களின் பராமரிப்பு செலவிற்கு போதியளவான கட்டணத்தை திருத்த செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | மாகாண சபையின் பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2023 திசெம்பர் 31 திகதி கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 16,401,637 தொகை மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 3,230,600 ஆனதுடன் 2022 மற்றும் 2023 இற்காக முத்திரைக் கட்டணம் பில்லிடல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மேற்படி | பெற வேண்டிய வருமானத்தை பில்லிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தால் ஒப்படைத்துள்ள கடமைகளை மேற்கொள்ளல்

பிரதேச சபை சட்டத்தின் 3 பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் பொது பாதைகள் மீதான நடவடிக்கைகளை முறையாக்கல் மற்றும் கட்டுப்படுத்தல், பொது மக்களின் நலன்கள், வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் மேற்கொள்ள வேண்டியிருந்த பணிகளை மேற்கொள்வது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் 126 பிரிவின் கீழ் முக்கிய 30 விடயங்களை மேற்கொள்ள துணைச் சட்டம் விதிக்க இயலுமாகவிருந்த போதும் 2023 திசெம்பர் 31 திகதி வரையும் அந்த விடயங்களிற்காக துணைச் சட்டம் விதித்திருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | பிரதேச சபை சட்ட பிரகாரம் துணைச் சட்டம் விதிக்க வேண்டும். |

### 3.2 இனங்கணப்பட்ட நட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆண்டின் பண்டக கணிப்பீட்டறிக்கை பிரகாரம் நூலகத்திலிருந்து வெளியிற்கு வழங்கிய 217 புத்தகங்கள் கிடைத்திருக்காத காரணத்தால் அதற்கு பொறுப்பான நபர்களிடமிருந்து அந்த புத்தகங்களை மீள் பெற்றுக் கொள்ள செலவாகும் தொகையை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நட்டத்தை அறவிட தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 முகாமைத்துவ செயற்திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபையினால் வருடாந்த குத்தகை அடிப்படையில் இறைச்சி விற்பனைக்காக வழங்கிய நொச்சியாகம நகரிலுள்ள இறைச்சி விற்பனை நிலையங்களை பௌதீக ரீதியாக | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | பொது அங்கீகார துணை சட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| பரீட்சிக்க சபையின் செயலாளரினால் சுகாதார மருத்துவ அலுவலரிற்கு அதிகாரத்தை ஒப்படைக்க வேண்டிய போதும் அவ்வாறான அதிகார ஒப்படைப்பை 2023 ஆண்டில் செய்திருக்கவில்லை. | | |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கலாஓய முன்பள்ளிக்காக 02 ஆணடுகளிற்கு முன்னர் நிர்மாணித்த புதிய கட்டிடம் விளைவற்று காணப்பட்டதுடன் கலாஓய விகாரை வளவு நடுவில் பாதுகாப்பற்ற 02 இடங்களில் முன்பள்ளி நடாத்தப்பட்டு வருகின்றன. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | புதிய கட்டிடத்தை பயன்படுத்த விரைவில் செயற்பட வேண்டும். |
| (ஆ) | சபையினால் நிர்மாணிக்கப்பட்ட பெறுமதி ரூபா 11,695,013 ஆன 03 கட்டிடங்கள் மற்றும் பெறுமதி வெளிப்படுத்தப்படாத உத்தியோக பூர்வ இல்லங்களை பயன்படுத்துதல் மற்றும் வருமான ஈட்டும் நோக்கத்திற்காக பயன்படுத்த தேவையான நடவடிக்கை எடுக்காததால் விளைவற்று நிலவின. | மேற்படி | பயன்பாட்டிற்கு எடுக்க கவனம் செலுத்த வேண்டும். |

## 4. கணக்களிபொறுப்பும் நல்லாலுகையும்

### 4.1 வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கை திட்ட பிரகாரம் சமூக அபிவிருத்தி மற்றும் சுகாதார சுத்திகரிப்பு கருத்திட்டங்களின் கீழ் செயற்படுத்த உத்தேசித்திருந்த ரூபா 2,100,000 ஆன ஏற்பாடு ஒதுக்கப்பட்ட 05 நிகழ்சித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | திட்டமிட்ட கருத்திட்டங்களை செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 4.2 சுற்றாடல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் கழிவுப் பொருள் நிலையத்தை நிர்மாணிக்க ரூபா 16,938,732 செலவிடப்பட்டிருந்த போதும் ஒழுங்கற்ற விதத்தில் கழிவுளை வெளியிடுவதால் சுற்றாடலிற்கும் மாசு ஏற்பட்டு வருவதுடன் அது தொடர்பாக முகாமைத்துவம் போதிய கவனம் செலுத்தியிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்தின் செயற்பாடுகளை தொடர்சியாக மேற்கொள்ள வேண்டும். |